# கேதார கௌரி விரதம்



முன்னொரு காலத்தில் பிருங்கி என்னும் பெயருடைய முனிவர் வாழ்ந்து வந்தார். அம்முனிவர் திருக்கைலாயத்திலே சிவபெருமானை வணங்கச் சென்றிருந்தார். அங்கு சிவபெருமானும் பார்வதிதேவியாரும் வீற்றிருந்தனர்.

பிருங்கி முனிவர் சர்வமும் சிவமயம் என்னும் கொள்கையுடையவர். சிவனை மட்டுமே வணங்குபவர். ஆதலால் வண்டு உருவம் எடுத்துப் பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து வணங்கினார். பார்வதியை அவர் வணங்கவில்லை. இதைக் கண்ட பார்வதிதேவியார் ஆத்திரமடைந்தார். அவர் பிருங்கி முனிவரின் சக்தியை இல்லாமல் செய்து விட்டார். சக்தியை இழந்த முனிவர் நிற்க முடியாமல் தடுமாறினார். அவர் தடுமாறுவதைக் கண்ட சிவபெருமான் அம் முனிவருக்கு ஊன்றுகோல் கொடுத்து அனுப்பினார்.

பார்வதிதேவியார் தான் தனித்து இருந்தமையிலேயே தன்னைப் பிருங்கி முனிவர் வணங்கவில்லை என்பதை உணர்ந்தார். அதனால் கோபத்தோடு பூலோகம் சென்று கௌதம முனிவரின் நந்தவனத்தில் அமர்ந்தார். கௌதம முனிவர் அவரைத் தனது ஆச்சிரமத்தில் இருக்கச் செய்தார்.



பிருங்கி முனிவர் தன்னை வணங்காமல் சென்றதாலேயே தாம் பூலோகம் வந்ததாகப் பார்வதிதேவியார் கூறினார். கௌதம முனிவர் பார்வதிதேவியைப் பார்த்து "அம்மையே எவருமே அனுட்டிக்காத விரதம் ஒன்று உள்ளது. அவ்விரதத்தினைத் தாங்கள் அனுட்டித்தால் இறைவனுடன் சேர்ந்து இருக்கலாம்" என்று கூறினார்.

கௌதம முனிவரின். ஆலோசனையைக் கேட்ட பார்வதிதேவி கேதார விரதத்தினை அனுட்டித்தார். இதன் பலனாகச் சிவபெருமான் தன்னுடலில் பாதியை அம்மையாருக்குக் கொடுத்தருளினார். சிவன் சக்தியுடன் இணைந்த வடிவமே அர்த்தநாரீஸ்வரர் வடிவமாகும். அம்பிகை கேதார விரதத்தை அனுட்டித்து வரம் பெற்றமையினால் கேதார கௌரி விரதம் என இன்று இவ்விரதம் எல்லோராலும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. இவ் விரதமானது புரட்டாதி மாதம், பூர்வ பக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபர பக்கச் சதுர்த்தசியில் நிறைவு பெறுகின்றது. இவ்விரதம் இருபத்தொரு நாட்கள் அனுட்டிக்கப்படும். இருபத்தொரு நாட்களும் அனுட்டிக்க இயலாதவர்கள் கடைசித் தினத்திலாவது விரதத்தினை அனுட்டிக்கலாம்.

விரதம் அனுட்டிப்போர் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவர். விரதத்தின் முதல்நாள் அன்று இருபத்தோரிழைகள் கொண்ட நூற்கயிற்றில் மஞ்சள் பூசி முதல் முடிச்சை இட்டு பூசையில் வைப்பர். அதனைத் தொடர்ந்து விரதநாட்கள் முடியும் வரை ஒவ்வொரு நாளும் ஒரு முடிச்சிடுவர். அதேவேளை பழம், பாக்கு, வெற்றிலை, அதிரசம், மஞ்சள் ஆகியவற்றில் ஒவ்வொன்றை வைத்து இருபத்தொரு நாட்களும் வழிபடுவர். பூசையில் வைத்த இந்த நோன்பு நூற்கயிற்றை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் இருபத்தொராவது நாள் தரித்துக் கொள்வர்.

இருபத்தொரு நாட்களும் விரதம் அனுட்டிப்பவர்கள் முதல் இருபது நாட்களும் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் ஒரு நேர உணவை மட்டும் உட்கொள்வர். இறுதி நாளாகிய சதுர்த்தசியில் உபவாசம் இருந்து மறுநாள் அதிகாலையில் பாரணை பண்ணுவர்.

இவ்விரதத்தினை முறைப்படி அனுட்டித்தால் இறையருள் பெற்று இன்பம் அடையலாம்.

**வல்லமை தந்திடுவாள் பராசக்தி**
**வாழி என்றே துதிப்போம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) பார்வதிதேவியார் பிருங்கி முனிவரின் சக்தியை ஏன் இல்லாமற் செய்தார்?
(2) கேதார கௌரி விரதத்தை அனுட்டிக்கும்படி பார்வதிதேவியாருக்கு ஆலோசனை கூறியவர் யார்?
(3) கேதார விரதத்தினை அனுட்டித்தமையால் பார்வதிதேவியார் அடைந்த பேறு யாது?
(4) அர்த்தநாரீஸ்வரர் என்பதன் பொருள் யாது?
(5) கேதார கௌரி விரதம் எத்தனை நாட்கள் அனுட்டிக்கப்படுகிறது?
(6) கேதார கௌரி விரதம் எந்த மாதத்தில் என்ன திதியில் ஆரம்பிக் கப்படுகிறது?
(7) கேதார கௌரி விரதத்தின் இறுதிநாளில் கையில் கட்டும் நூற்கயிறு எத்தனை இழைகளைக் கொண்டது? எத்தனை முடிச்சுக்களைக் கொண்டது?

## செயற்பாடு

* விரதம் அனுட்டிப்போருக்கு உதவியாக நீங்கள் செய்யக்கூடியவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.